## 31. நமன்றமர்நணுகாநெறி.

*பண் - நட்டபாடை.*

**ஆ**தித்தரெ னச்சொல்சுரர் களினீள்பகை யறுத்த
சோதிச்சுடர் வடிவேலவர் சுகுர்தத்திரு நாமம்
ஓதிப்புவி மீதேநித முவந்தாரரு ணாடிச்
சாதித்திடு வோர்பானமன் றமர்தாநணு காரே. 1

**எ**ன்பார்தசை செந்நீர்நரம் பெனவேய்ந்தபொய் யாக்கை
துன்பாலழி முனமேசிவ சுதனான குகேசன்
அன்பாவதை யன்போடெண்ணி யன்பிற்படி யுமவன்
தன்கானினை வோர்பானமன் றமர்தாநணு காரே. 2

**பா**ளைச்சுருண் மீதஞ்சிறை யளிதானளி பருக
வாளைப்பொரு தத்தாரைக ளிலகும்வன மகளார்
தோளைத்தழு வுங்காமரி லுழல்சேயிரு தூய
தாளைப்புகழ் வோர்பானமன் றமர்தாநணு காரே. 3

**ம**ரணஞ்சன னஞ்சூழ்கவன் மருளேதுமி லாவோர்
புரணந்தனை யுடையாரடை பொருளாவிக ளுள்வாழ்
கரணன்மர கதரூப கலாபச்சிகி யூர்வோன்
சரணந்தொழு வோர்பானமன் றமர்தாநணு காரே. 4

**நி**தம்வந்தனை புரிவோரக நிகழுங்கிரு பாளு
மதவங்கய முகனாரிள வலெனுங்கும ரேசன்
பதபங்கய வியன்மான்மிய மொழிசீரிய பாடல்
சததஞ்சொலு வோர்பானமன் றமர்தாநணு காரே. 5

**ம**னைபன்னிய ருஞ்சேயுற வோடேவிரி மண்ணில்
வினைபண்ணியு ழல்வோருளு மிளிர்வேன்முரு கோனன்
பினையுன்னடி யார்க்கேகளி பெருகும்படி தொண்டு
தனையேபுரி வோர்பானமன் றமர்தாநணு காரே. 6

---

**3. தோளைத் தழுவுங் காமர்** = *விவாககால பாணிக்கிரகண அழகு. இதுபற்றி 25 - 10 - ன் குறிப்புரையிலும் விளக்கப்பட்டதன்றோ. "காமர் அந்தமே மயமே யொண்மை" என்பது* **சூ - நிகண்டு.**

**ப**லிக்கப்பரை கொண்டேமறு கூடின்னிசை பாடிப்
புலிப்பொற்புரி யரையாத்தொரு பூவெண்கிரி யுறைவோர்
வலிக்கொப்புறு குகதேவுயர் சரிதங்களை மனமே
சலிக்கப்படிப் போர்பானமன் றமர்தாநணு காரே. 7

**அ**வமாமதி பாவம்பல வயர்ந்தோர்குழு வுள்ளும்
நவமாமணி முடியும்பர்க ணாளுஞ்சலி யாமற்
சிவமேயென நினைகின்றவொர் செவ்வேளடி நேடித்
தவமேபுரி வோர்பானமன் றமர்தாநணு காரே. 8

**ம**தங்கட்டிய மருப்புக்கரி யைப்பாய்முகை மகடூஉ
நிதம்பப்புழை வீழாவொரு நெறிநின்றறு முகவேள்
பதஞ்சிக்கிட விலையேயென பணுவோமென விழிநீர்
ததும்பத்திரி வோர்பானமன் றமர்தாநணு காரே. 9

**தே**ர்ந்தோர்துதி செய்யுந்திருப் புகழ்சொன்னவ னெஞ்சம்
ஓர்ந்தேயருள் புரிந்தோனெனு முமையாள்சுத னடிக்கண்
வார்ந்தோடுநன் மதுநச்சிடு வரிபோலவ னன்பிற்
சார்ந்தேயிருப் போர்பானமன் றமர்தாநணு காரே. 10

மன்மத வருடம் ஆவணி மாதம் 22ஆம் தேதி சுக்கிரவாரம்.